# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:202/பேரூ/2025**
**நாள் : 17.11 .2025**

K.P. மணி,
காசிபாளையம், கோபி வட்டம்,
ஈரோடு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
காசிபாளையம் (கோபி) பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம். – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், கோபி, வட்டம், காசிபாளையம், 16/42 குப்பன் வீதி என்ற முகவரியை சேர்ந்த திரு. K.P. மணி என்பவரது 06.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.06.2025 அன்று பெறப்பட்டு, 202/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், காசிபாளையம், 16/42 குப்பன் வீதி என்ற முகவரியை சேர்ந்த திரு. K.P. மணி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 06.06.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“மனுதாரர் ஆகிய நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன்.

காசிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. மணிகண்டன் அவர்களிடம் நான் முதல்வரின் முகவரியில் மனு செய்து தகவல் கேட்டதற்கு அவர் அளித்துள்ள பதில்கள் கீழ்க்கண்டவாறு:-

1. மனு எண். 6551839 ஏரியா சபை கூட்டத்தில் கலந்து கொண்ட அடையாள அட்டை அணியாத பேரூராட்சி அலுவலர் நின்று கொண்டே 15 நிமிடத்தில் கூட்டத்தினை முடித்துக்கொண்டார். தீர்மானம் அதன் பதிவேட்டில்

பதியவில்லை. பதிவேடுகள் காண்பிக்கப்படவில்லை. இதற்கு முன் நடந்த கூட்ட தீர்மான கோரிக்கைகளை நிறைவேற்றியது பற்றி குறிப்பிடவில்லை. இதுபற்றி கேட்டதற்கு வார்டு சபை நடத்த பதிவேடுகள் மற்றும் தீர்மான புத்தகம் வரும் கூட்டங்களில் பதிந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மனு எண். 7869730-ல் பேரூராட்சியில் மேடை அமைத்து சின்டெக்ஸ் டேங்க் மூலம் குடிநீர் சப்ளை செய்யும் பணிகள் என்ன திட்டத்தின் கீழ் என்ன செலவில் செய்யப்படுகிறது என்று எந்த தகவலும் இல்லை காட்சிப்படுத்தாதது, நடைபெறும் பணிகளுக்கான தகவலை காட்சிப்படுத்தக் கோரியதற்கு பணிகளின் விபர பலகை இல்லாத இடத்தில் ஒப்பந்ததாரரிடம் கூறி பணிகளின் விவரப் பலகை வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். ஆனால் இன்று வரை வைக்கப்படவில்லை.
3. மனு எண். 7926805 14.04.2024 தேதியில் ஏரியா சபை கூட்டம் அரசு விதித்துள்ள விதிமுறைகளின்படி நடத்தப்படாததன் காரணம் கேள்வி எழவில்லை, மற்றும் 25.01.2024 தேதியில் ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததன் காரணம் கேள்வி எழவில்லை.
4. மனு எண். 8011486 ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததன் காரணம் கேட்டதற்கு பாராளுமன்ற தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததால் கூட்டம் நடத்தப்படவில்லை.
5. மனு எண். 815973 நாய்/வெறிநாய் கடித்தால் நஷ்ட ஈடு வழங்க கோரியதற்கு பதிலாக பேரூராட்சி அலுவலகத்தில் பார்வையிட வேண்டிய பதிவேடுகள்/ஆவணங்களை குறிப்பிட்டு தெரிவிக்கும்பட்சத்தில் சேகரித்து வழங்க இயலும், தேவைப்படும் ஆவணங்களை ஒளி நகல் எடுக்க எந்தெந்த ஆவணங்களில் எத்தனை பக்கம் என்பதை தெரிவித்த பின்னரே அதற்குரிய கட்டண விபரம் தெரிவிக்கப்படும் என்று கூறியுள்ளார்.
6. மனு எண். 8406583 தெரு நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க (முன் மனு எண். 6331841) கோரியதற்கு உரிய துறை மூலம் தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்து இனப்பெருக்கத்தை குறைத்து தெரு நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
   மண்டல இயக்குநர் கால்நடை பராமரிப்புத் துறை, ஈரோடு அவர்கள் ந.க.எண். 232/இ/2024 நாள் 11.07.2024 அவர்கள் எனது தகவலான காசிபாளையம் பேரூராட்சிக்கு 2015 முதல் இன்றுவரை தெரு நாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாடு செய்த பட்டியலின் முழு கோப்பின் ஒளி நகல் கேட்டதற்கு பதிலாக காசிபாளையம் பேரூராட்சிக்கு 2015 முதல் இன்றுவரை தெரு நாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாடு செய்யப்படவில்லை. (பேரூராட்சி நிர்வாகத்தினர் நாளது வரை நாய்களுக்கு உரிய அறுவை சிகிச்சை குறித்து இதுவரை அணுகவில்லை) என்று கூறியுள்ளார்.
7. மனு எண். 10175167 ஏரியா சபை கூட்டம் முறையாக நடத்த கேட்டும், முறையாக நடத்தாத செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க கேட்டதற்கு ஏரியா சபை கூட்டம் நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பதில்.

8. மனு எண். 10311076 ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததன் காரணம் கேட்டு அதற்கு செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க கேட்டதற்கு கூட்டம் நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பதில்.
9. மனு எண். 10814954 குப்பன் வீதியில் வடிகால் பணிக்கு பூஜை போடப்பட்டது. அதை வார்டு உறுப்பினர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிக்காமல் கட்சிக்காரர்கள் மட்டுமே அழைப்பின் பேரில் கலந்து கொண்டனர். இது சரியல்ல இனி வரும் காலங்களில் சம்பந்தப்பட்ட இடத்தில் உள்ள பொதுமக்களுக்கு தெரிவிக்க கேட்டுக்கொண்டேன். அதற்கு வார்டு உறுப்பினர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது என்று பொய் சொல்லியுள்ளார்.
10. மனு எண். 10845148 அங்கன்வாடிக்கு செல்லும் வழிபாதையினை கால்நடைகள் மற்றும் அதன் கழிவுகள் உள்ளதால் குழந்தைளுக்கு உடல்நலம் பாதிப்பு, காற்று, நிலம் மாசுபடுகிறது. அதை நிரந்தரமாக அகற்றி சுத்தமாக வைக்க கோரியதற்கு தற்காலிகமாக சரியாக்கி தந்துள்ளார். புகைப்படம் இணைத்துள்ளதாக பொய் சொன்னார். இப்போதும் கால்நடைகளை கட்டி வைத்துள்ளனர்.
11. மனு எண். 10845152ல் அங்கன்வாடிக்கு செல்லும் வழிபாதையினை கால்நடைகள் மற்றும் அதன் கழிவுகள் உள்ளதை அகற்றி சுத்தமாக உள்ள புகைப்படத்தினை பதிவிடாததை கேட்டு பதிவிட்டார்.
12. மனு எண். 10842563 25.01.2025ல் வார்டு சபை நடத்தாதது பற்றி கேட்டதற்கு வார்டு சபை தலைவர் தான் முழு பொறுப்பு என்று கூறியுள்ளார்.
13. மனு எண். 11446775 பேரூராட்சியில் 14.04.2025 அம்பேத்கர் தினத்தன்று நடத்த வேண்டிய ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததன் காரணம் கேட்டதற்கு விடுமுறை நாள் என்பதால் நடத்தப்படவில்லை என்று பதில் அளித்துள்ளார்.
14. மனு எண். 6331841 பேரூராட்சியில் சுற்றித் திரியும் நாய்களின் எண்ணிக்கை, வளர்ப்பு நாய்களின் எண்ணிக்கை, இதில் இனப்பெருக்கம் தடை செய்யப்பட்ட நாய்களின் எண்ணிக்கை பற்றிய தகவல் கேட்டு வழங்கவில்லை. அதனால் மேற்கண்ட பேரூராட்சி செயல் அலுவலர் செய்ய வேண்டிய பணியினை செய்ய மறுத்த காரணத்துக்காக அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பணி நீக்கம் செய்ய கேட்டுக்கொண்டு,
15. மேலும், காசிபாளையம் பேரூராட்சியில் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தில் (NSMT) 2024-25 காசிபாளையம் பேரூராட்சியில் Restoration of BT Road at Ward 14. P.K. Kaliyannan Street,Ramasamy Street, Nataraj Street, K.A. Kaliappa Street, Easwaran Street Bid Reference No.163/2024 இதில் K.A. காளியப்பா வீதி கான்கிரீட் ரோடில் இதுவரை மறு சீரமைப்பு பணிகள் ஏதும் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தனது பணியினை திறம்பட செய்யவேண்டிய வெளிப்படையான நிர்வாகம் இல்லாத செயல் அலுவலர், பொய்யான தகவல் தருவது மற்றும் ஏரியா சபை கூட்டம் நடத்த வேண்டிய தினம் அறியாத செயல் அலுவலருக்கு அவர் பணியினை சரியாக செய்யாததன் பேரில் துறை ரீதியான நடவடிக்கை எடுத்து பணி நீக்கம் செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் இனம் 15க்கு பொறுப்பேற்க வேண்டிய பேரூராட்சியின் செயல் அலுவலர், செயற் பொறியாளர் மற்றும் பேரூராட்சித் தலைவர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்து தீர விசாரித்து பணி நீக்கம் செய்து கடுமையான தண்டனை பெற்றுத்தர வேண்டுமென்று தங்களை கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் காசிபாளையம் (கோபி), பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. காசிபாளையம் (கோபி), பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. மணிகண்டன் என்பவர் தனது 07.08.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 85/2025–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

| வ.எண். | மனுதாரர் கேள்வி | செயல் அலுவலரின் பதில் அறிக்கை |
|---|---|---|
| 1 | மனு எண். 6551839-ல் ஏரியா சபை கூட்டத்தில் கலந்து கொண்ட அடையாள அட்டை அணியாத பேரூராட்சி அலுவலர் நின்று கொண்டே 15 நிமிடத்தில் கூட்டத்தினை முடித்துக்கொண்டார். தீர்மானம் அதன் பதிவேட்டில் பதியப்படவில்லை. இதற்குமுன் நடந்த கூட்ட தீர்மான கோரிக்கைகளை நிறைவேற்றியது பற்றி குறிப்பிடப்படவில்லை. இதுபற்றி கேட்டதற்கு வார்டு சபை நடத்த பதிவேடுகள் மற்றும் தீர்மான புத்தகம் வரும் கூட்டங்களில் பதிந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். | காசிபாளையம் (கோபி) பேரூராட்சியில் வார்டு சபை நடத்த வார்டு உறுப்பினரே வார்டு சபை தலைவர் ஆவார். வார்டு சபை நடத்தும் போது பொதுமக்களிடம் பெறும் புகார்களை பதியும் பதிவேடுகள், தீர்மான புத்தக பதிவேடுகள் உள்ளன. வார்டு சபை தலைவர் பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்து பதிவேடுகளில் பதிந்து தீர்மானங்களாக நிறைவேற்றப்பட வேண்டும். பேரூராட்சி பணியாளர்கள், வார்டு சபை தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுடன் கூட்டம் முடியும் வரை இருக்க வேண்டும். மேலும் இனி வரும் வார்டு சபை கூட்டங்களில் வார்டு சபை நடத்தும் நேரம் மற்றும் நாள் ஆகியவை முன்கூட்டியே கூறி மக்களின் குறைகளை பதிந்து தீர்மானங்கள் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. |
| 2 | மனு எண். 7869730 பேரூராட்சியில் மேடை அமைத்து சின்டெக்ஸ் டேங்க் மூலம் குடிநீர் சப்ளை | முதல்வரின் முகவரி மனுவில் கோரிய மனுவிற்கு காசிபாளையம் (கோபி) பேரூராட்சியில் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று |

| | | |
|---|---|---|
| | செய்யும் பணிகள் என்ன திட்டத்தின் கீழ் என்ன செலவில் செய்யப்படுகிறது என்ற எந்த தகவலும் இல்லை காட்சிப்படுத்தாதது நடைபெறும் பணிகளுக்கான தகவலை காட்சிப்படுத்த கோரியதற்கு பணிகளின் விபர பலகை இல்லாத இடத்தில் ஒப்பந்ததாரரிடம் கூறி பணிகளின் விவரப்பலகை வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். ஆனால் இன்று வரை வைக்கப்படவில்லை. | வருகிறது. ஒப்பந்ததாரர்கள் பணி ஆரம்பிக்கும்போது பணிகளின் விபர பலகை வைத்து பணியை ஆரம்பிக்கின்றனர். ஒரு சில பணிகளுக்கு பணி முடித்து வைக்கின்றனர். பணிகளின் விபர பலகை இல்லாத இடத்தில் ஒப்பந்ததாரர்களிடம் கூறி பணிகளின் விபர பலகை வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. |
| 3 | மனு எண். 7926805 14.04.2024 தேதியில் ஏரியா சபை கூட்டம் அரசு விதித்துள்ள விதிமுறைகளின்படி, நடத்தப்படாததன் காரணம் கேள்வி எழவில்லை மற்றும் 25.01.2024 தேதியில் ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததன் காரணம் கேள்வி எழவில்லை . | முதல்வரின் முகவரி மனுவில் கோரிய ஏப்ரல் 14ம் தேதி அன்று ஏரியா சபை நடத்த கேள்வி எழவில்லை. மேலும் ஜனவரி 25ம் தேதி ஏரியா சபை கூட்டம் நடத்தாதற்கு கேள்வி பெறவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. |
| 4 | மனு எண். 8011486 ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததன் காரணம் கேட்டதற்கு பாராளுமன்ற தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததால் கூட்டம் நடத்தப்படவில்லை. | முதல்வரின் முகவரி மனுவில் கோரிய மனுவிற்கு பாராளுமன்ற தேர்தல் விதிகள் நடைமுறையில் இருந்ததால் ஏரியா சபைக் கூட்டம் நடத்தப்படவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. |
| 5 | மனு எண். 815973 நாய்/வெறிநாய் கடித்தால் நஷ்ட ஈடு வழங்கக் கோரியதற்கு பதிலாக பேரூராட்சி அலுவலகத்தில் பார்வையிட வேண்டிய பதிவேடுகள்/ஆவணங்கள் குறிப்பிட்டு தெரிவிக்கும்பட்சத்தில் சேகரித்து வழங்க இயலும், தேவைப்படும் ஆவணங்களை ஒளி நகல் எடுக்க எந்தெந்த ஆவணங்களில் எத்தனை பக்கம் என்பதை தெரிவித்த பின்னரே அதற்குரிய கட்டண விபரம் தெரிவிக்கப்படும் என்று கூறியுள்ளார். | நாய் / வெறிநாய் கடித்தால் நஷ்ட ஈடு வழங்க கோரியதற்கு பேரூராட்சியில் நஷ்ட ஈடு வழங்க வழிவகையில்லை. மேலும் பதிலாக பேரூராட்சி அலுவலகத்தில் பார்வையிட வேண்டிய பதிவேடுகள் / ஆவணங்கள் குறிப்பிட்டு தெரிவிக்கும்பட்சத்தில் சேகரித்து வழங்க இயலும். தேவைப்படும் ஆவணங்களை ஒளி நகல் எடுக்க எந்தெந்த ஆவணங்களில் எத்தனை பக்கம் என்பதை தெரிவித்த பின்னரே அதற்குரிய கட்டண விவரம் தெரிவிக்கப்படும் |

| | | |
|---|---|---|
| | | என்ற தகவல் வழங்கியது (முதல்வரின் முகவரி மனுவில் பதிவேற்றம் செய்யும் போது தவறுதலாக File மாற்றி பதிவேற்றம் செய்யப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்). |
| 6 | மனு எண். 8406583 தெரு நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க (முன் மனு எண். 6331841) கோரியதற்கு உரிய துறை மூலம் தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்து இனப்பெருக்கத்தை குறைத்து தெரு நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மண்டல இயக்குநர் கால்நடை பராமரிப்பு துறை ஈரோடு அவர்களின் ந.க. எண். 232/இ/2024, நாள் 11.07.2024 அவர்கள் எனது தகவலான காசிபாளையம் பேரூராட்சிக்கு 2015 முதல் இன்றுவரை தெரு நாய்களுக்கு கட்டுப்பாடு செய்த பட்டியலின் முழு கோப்பின் ஒளி நகல் கேட்டதற்கு பதிலாக காசிபாளையம் பேரூராட்சிக்கு 2015 முதல் இன்றுவரை தெரு நாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாடு செய்யப்படவில்லை. (பேரூராட்சி நிர்வாகத்தினர் நாளதுவரை நாய்களுக்கு உரிய அறுவை சிகிச்சை குறித்து இதுவரை அணுகவில்லை) என்று கூறியுள்ளார். | முதல்வரின் முகவரி மனுவில் கோரிய மனுவிற்கு தெரு நாய்களை கட்டுப்படுத்த உரிய துறை மூலம் தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்து இனப்பெருக்கத்தை குறைத்து தெரு நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது. |
| 7 | மனு எண். 10175167 ஏரியா கூட்டம் முறையாக நடத்தக் கேட்டும் முறையாக நடத்தாத செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க கேட்டதற்கு ஏரியா சபை கூட்டம் நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பதில். | முதல்வரியின் முகவரியில் கோரிய மனுவிற்கு அடுத்த ஏரியா சபை கூட்டம் கால அட்டவணையின்படி டிசம்பர் 10ம் தேதி நடத்தப்பட வேண்டியுள்ளது. அப்போது ஏரியா சபை கூட்டம் நடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 8 | மனு எண். 10311076 ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததன் காரணம் கேட்டு அதற்கு செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க கேட்டதற்கு கூட்டம் நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பதில். | காசிபாளையம் (கோபி) பேரூராட்சியில் ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததன் காரணம் கேட்டு அதற்கு செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க கேட்டதற்கு ஏரியா சபை கூட்டம் நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற தகவல் வழங்கப்பட்டது. |
| 9 | மனு எண். 10814954 குப்பன் வீதியில் வடிகால் பணிக்கு பூஜை போடப்பட்டது. அதை வார்டு உறுப்பினர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிக்காமல் கட்சிக்காரர்கள் மட்டுமே அழைப்பின் பேரில் கலந்து கொண்டனர். இது சரியல்ல. இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட இடத்தில் உள்ள பொது மக்களுக்கு தெரிவிக்க கேட்டுக் கொண்டேன். அதற்கு வார்டு உறுப்பினர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப் பட்டது என்று பொய் சொல்லியுள்ளார். | முதல்வரின் முகவரி மனுவில் வார்டு எண்.13 குப்பன் வீதியில் நடைபெறும் வடிகால் பணிக்கு துவக்க பூஜை நடைபெற்றது. அதற்கு வார்டு உறுப்பினர் மற்றும் அப்பகுதி பொது மக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும் பணிக்கான தகவல் பலகை வைக்க ஒப்பந்ததாரரிடம் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. |
| 10 | மனு எண். 10845148-ல் அங்கன்வாடிக்கு செல்லும் வழிப்பாதையினை கால்நடைகள் மற்றும் அதன் கழிவுகள் உள்ளதால் குழந்தைகளுக்கு உடல்நலம் பாதிப்பு, காற்று, நிலம் மாசுபடுகிறது. அதை நிரந்தரமாக அகற்றி சுத்தமாக வைக்க கோரியதற்கு தற்காலிகமாக சரியாக்கி தந்துள்ளார். (புகைப்படம் இணைத்துள்ளதாக பொய் சொன்னார். இப்போதும் கால்நடைகளை கட்டி வைத்துள்ளனர். | முதல்வரின் முகவரி மனுவில் வார்டு 14 ஈஸ்வரன் வீதியில் உள்ள அங்கன்வாடி பகுதியில் கால்நடைகளை கட்டி வைப்பவர்களை அலுவலக பணியாளர்கள் நேரில் சந்தித்து அப்பகுதியில் ஆடு மாடுகளை கட்டக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அங்கன்வாடிக்கு குழந்தைகள் நடந்து செல்வதற்கு ஏதுவாக சுத்தம் செய்யப்பட்டு அப்பகுதி முழுவதும் சுத்தமாக உள்ளது. அதற்கான புகைப்படம் இணைத்து இணைக்கப்பட்டுள்ளது என்ற பதிலறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 11 | மனு எண். 10845152-ல் அங்கன்வாடிக்கு செல்லும் வழிப்பாதையினை கால்நடைகள் மற்றும் அதன் கழிவுகள் உள்ளதை அகற்றி சுத்தமாக உள்ள புகைப்படத்தினை பதிவிடாததை கேட்டு பதிவிட்டார். | முதல்வரின் முகவரி மனுவில் வார்டு 14 ஈஸ்வரன் வீதியில் உள்ள அங்கன்வாடி பகுதியில் கால்நடைகளை கட்டி வைப்பவர்களை அலுவலக பணியாளர்கள் நேரில் சந்தித்து அப்பகுதியில் ஆடு மாடுகளை கட்டக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அங்கன்வாடிக்கு குழந்தைகள் நடந்து செல்வதற்கு ஏதுவாக சுத்தம் செய்யப்பட்டு அப்பகுதி முழுவதும் சுத்தமாக உள்ளது. அதற்கான புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது என்ற பதிலறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. |
| 12 | மனு எண்.10842563, 25.01.2025-ல் வார்டு சபை நடத்தாதது பற்றி கேட்டதற்கு வார்டு சபை தலைவர் தான் முழு பொறுப்பு என்று கூறியுள்ளார். | முதல்வரின் முகவரி மனுவில் 25.01.2025ம் தேதி நடத்தப்பட்ட வார்டு சபையில் வார்டு 13ல் நடத்தப்படவில்லை. வார்டு சபை தலைவர் வார்டு உறுப்பினர் ஆவார். வார்டு சபை கூட்ட தலைவரே முழு பொறுப்பாவார். வார்டு சபை நடத்த இரண்டு நாட்களுக்கு முன்பே விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தங்களுக்கு வாட்ஸ் அப் செயலி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற பதிலறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. |
| 13 | மனு எண். 11446775 பேரூராட்சியில் 14.04.2025 அம்பேத்கர் தினத்தன்று நடத்த வேண்டிய ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததன் காரணம் கேட்டதற்கு விடுமுறை நாள் என்பதால் நடத்தப்படவில்லை என்று பதில் அளித்துள்ளார். | காசிபாளையம் (கோபி) பேரூராட்சியில் ஏரியா சபை கூட்டம் ஏப்ரல் 14ம் தேதி விடுமுறை நாளாக உள்ளதால் நடத்தப்படவில்லை. மேலும் 2025ஆம் ஆண்டில் 25.01.2025 தேதி வார்டு சபை கூட்டம் நடத்தப்பட்டுள்ளது என்ற தகவல் அனுப்பி வைக்கப்பட்டது. |
| 14 | மனு எண். 6331841 பேரூராட்சியில் சுற்றி திரியும் நாய்களின் | இம்மனுவில் 2 தகவல்கள் கேட்கப்பட்டுள்ளது. வறுமைக் |

| | | |
|---|---|---|
| | எண்ணிக்கை, வளர்ப்பு நாய்களின் எண்ணிக்கை இதில் இனப்பெருக்கம் தடை செய்யப்பட்ட நாய்களின் எண்ணிக்கை பற்றிய தகவல் கேட்டு வழங்கவில்லை. அதனால் மேற்கண்ட பேரூராட்சி செயல் அலுவலர் செய்ய வேண்டிய பணியினை செய்ய மறுத்த காரணத்துக்காக அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பணி நீக்கம் செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது. | கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பட்டியல் வழங்க கேட்டதற்கு 09.11.2023ம் தேதியில் பேரூராட்சி அலுவலக செலுத்துசீட்டு எண். 255/2023-24ம் ரூ.96/- செலுத்தப்பட்டதன்படி வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சியில் சுற்றித் திரியும் நாய்களின் எண்ணிக்கை வளர்ப்பு நாய்களின் எண்ணிக்கை இதில் இனப்பெருக்கம் தடை செய்யப்பட்ட நாய்களின் எண்ணிக்கை பற்றிய தகவல் கேட்டதற்கு இது தொடர்பாக உத்தரவு ஏதும் வரப்பெறாததால் கணக்கெடுப்பு ஏதும் செய்யப்படவில்லை. ஆதலால் தகவல் வழங்க இயலவில்லை. |
| 15 | மேலும் காசிபாளையம் கோபி பேரூராட்சியில் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தில் (NSMT) 2024-2025 காசிபாளையம் பேரூராட்சியில் Restoration of BT Road at ward 14, P.K. Kaliyannan Street, Ramasamy Street, Nataraj Street, K.A. Kaliyappa Street, Eswaran Street Bid Reference No. 163/2024 இதில் K.A. காளியப்பா வீதி கான்கிரீட் ரோடில் இதுவரை மறுசீரமைப்பு பணிகள் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. | காசிபாளையம் (கோபி) பேரூராட்சியில் 2024-2025ம் ஆண்டு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தில் வார்டு 14 பி.கே. காளியண்ணன் வீதி, ராமசாமி வீதி, நடராஜா வீதி, கே.ஏ. காளியப்பா வீதி மற்றும் ஈஸ்வரன் வீதியில் தார்சாலை அமைத்தல் பணிக்கு 22.07.2024ம் தேதி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 23.08.2024ம் தேதி வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி 02.02.2025 அன்று முடிக்கப்பட்டுள்ளது. பி.கே. காளியண்ணன் வீதி, ராமசாமி வீதி, நடராஜ் வீதி, கே.ஏ. காளியப்பா வீதி மற்றும் ஈஸ்வரன் வீதி மொத்த நீளம் தார்சாலை 987 மீட்டருக்கு போடப்பட்டுள்ளது. அதில் கே.ஏ. காளியப்பா வீதியின் மொத்த நீளம் 154மீ. தார்சாலைக்கு மட்டும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் |

| | | |
|---|---|---|
| | | தார்சாலை 52 மீட்டருக்கு அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 102 மீ. கான்கிரீட் சாலையாக உள்ளதால் அப்பகுதியில் சாலை பணி மேற்கொள்ளப்படவில்லை. இப்பணி லக்கம்பட்டி தொகுப்பு இளநிலை பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்ற பதிலறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. |

4. மனுதாரர் திரு. K.P. மணி மற்றும் எதிர்மனுதாரரான காசிபாளையம் (கோபி) பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 11.09.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.09.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. K.P. மணி என்பவர் 11.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

➢ “ஈரோடு மாவட்டம், காசிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கீழ்க்காணும் 15 இனங்களுக்கு ‘முதல்வரின் முகவரியில்’ மனுக்கள் மூலம் தகவல்கள் கோரியதில் செயல் அலுவலர் தவறான/பொய்யான தகவல்களை அளித்துள்ளார்.

(1) ஏரியா சபை கூட்டத் தீர்மானங்களை பதிவேட்டில் பதிவு செய்யப்படாதது.

(2) சின்டெக்ஸ் டேங்க் எந்த திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.

(3) 25.01.2025 அன்று ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததற்கான காரணம்.

(4) ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாததற்கான காரணம்.

(5) தெரு நாய் கடித்தால் நஷ்ட ஈடு பஞ்சாயத்தில் வழங்கப்படுமா.

(6) தெரு நாய்களை கட்டுப்படுத்துவது குறித்து நடவடிக்கை எடுத்த விவரம்.

(7) ஏரியா சபை கூட்டம் நடத்தாத செயல் அலுவலர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை.

(8) வடிகால் அமைக்க துவக்க பூஜைக்கு அறிவிப்பு வெளியிடப்படாதது.

(9) 14.04.2025 அம்பேத்கர் தினத்தன்று ஏரியா சபை கூட்டம் நடத்தப்படாதது.

(10) பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நாய்களின் எண்ணிக்கை.

(11) K.A. காளியப்பா வீதியை மறுசீரமைப்பு செய்யாதது.

- வரிசை எண்கள் 6,9 மற்றும் 11 ஆகிய மனுக்களுக்கு பதில் கோரியதற்கு சரியான தகவல்களை பேரூராட்சி செயல் அலுவலர் அளிக்கவில்லை.
- மேற்காணும் மனுவில் கோரியதற்கு தவறான பதில் அளித்த காசிப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சரி செய்து தர ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்''. என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான காசிபாளையம் (கோபி) பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. மணிகண்டன் என்பவர் 11.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- ''மனுதாரர் திரு. K.P. மணி என்பவர் 'முதல்வரின் முகவரியில்' மனுக்கள் மூலம் காசிபாளையம் (கோபி) பேரூராட்சி தொடர்பான 15 இனங்களுக்கு தகவல்கள் கோரியதில் உரிய பதில்கள் அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் தனது 06.06.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தவறான/பொய்யான பதில்கள் அளித்ததாக புகார் தெரிவித்துள்ளார். ஆனால் மனுதாரர் புகார் தெரிவித்துள்ளபடி எவ்வித தவறான/பொய்யான தகவல்கள் அளிக்கப்படவில்லை என்பதை எனது விளக்க அறிக்கையாக இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கை ந.க.எண். 85/2025 நாள் 07.08.2025-ல் விளக்கமாக எனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளேன். மேலும் இதற்கான புகைப்பட நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- வரிசை எண்.6-க்கு 20.07.2024, வரிசை எண்.9-க்கு 31.01.2025 மற்றும் வரிசை எண். 11-க்கு 31.01.2025 ஆகிய தேதிகளில் மனுதாரருக்கு கடித குறிப்பு அனுப்பபட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.
- 07.08.2025 நாளிட்ட பதிலறிக்கையினையும் மேற்காணும் புகார்களுக்கு எனது வாக்குமூலமாக பதிவு செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் திரு. K.P. மணி என்பவரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான காசிபாளையம் (கோபி) பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம், காசிபாளையம் இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. K.P. மணி என்பவர் தனது 06.06.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஈரோடு மாவட்டம், காசிபாளையம் (கோபி) பேரூராட்சிக்கு தொடர்பான ஏரியா சபை கூட்டம் நடத்துவது, தெருநாய்கள் கட்டுப்படுத்துவது, அங்கன்வாடி பகுதியை பராமரிப்பு செய்தல் பேரூராட்சியின் கட்டுமான பணிகளை பொதுமக்களுக்கு தெரிவித்தல் போன்ற இனங்களுக்கு முதல்வரின் முகவரி மனுக்கள் மூலம் தகவல்களை கோரியதில் பேரூராட்சி செயல் அலுவலர் தவறான மற்றும் பொய்யான தகவல்களை அளித்துள்ளார் என புகாராக தெரிவித்து, காசிபாளையம் (கோபி) பேரூராட்சி செயல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

அரசாணை (நிலை) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 24.06.2022 மற்றும் அரசாணை (நிலை) எண். 93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (தேர்தல்) வழங்கல் துறை நாள் 24.06.2022-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பகுதியில் வாழும் பொதுமக்கள் தங்களது பகுதிகளுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து கருத்துக்கள் அளிப்பதற்கும் அதன் தீர்வுக்கான நடவடிக்கைகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பகிர்வதற்கும் வாய்ப்பு வழங்கும் வகையில் ஏரியா சபை உருவாக்கி, ஒவ்வொரு 3 மாதத்திற்கு ஒருமுறை வார்டு உறுப்பினர் தலைமையில் நடத்தப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 23.05.2023 நாளிட்ட அரசு செய்தி வெளியீடு எண். 995-ல் ஏரியா சபைகளின் கூட்டங்களை ஆண்டுதோறும்

(1) தேசிய வாக்காளர் தினமான ஜனவரி 25ஆம் நாள்
(2) டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினமான ஏப்ரல் 14ஆம் நாள்
(3) பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 15 மற்றும்
(4) சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10ஆம் நாள் ஆகிய 4 தினங்களில் நடத்திட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது முதல்வரின் முகவரி மனுவில் ஏரியா சபை கூட்ட தீர்மானங்கள் பதிவு செய்யப்படவில்லை என்ற புகாருக்கு இனிவருங்காலத்தில் ஏரியா சபை கூட்டம் நடைபெறும்போது பதியப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதன் மூலம் அவர் பணியில் தனது கடமையிலிருந்து தவறியுள்ளார் என்பது தெரிய வருகிறது.

மேலும் அரசு செய்தி வெளியீட்டின்படி 25.01.2024 மற்றும் 14.04.2024 அன்று நடத்தப்பட வேண்டிய ஏரியா சபை கூட்டம் நடத்தாமல், அதற்கான உரிய விளக்கத்தையும் மனுதாரருக்கு தெரிவிக்கப்படவில்லை என்பதை செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது. மேலும் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினமான 14.04.2025 அன்று விடுமுறை தினமாக இருந்த காரணத்தால் ஏரியா சபை நடத்தப்படவில்லை என செயல் அலுவலர் தெரிவித்திருப்பது அரசால் வெளியிடப்பட்ட ஆணைக்கு எதிராக செயல்பட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது.

பேரூராட்சிகளில் நடைபெறும் கட்டுமானப் பணிகள் தொடர்பாக விபர பலகை வைக்காமல், இனிவருங்காலத்தில் ஒப்பந்ததாரர் மூலம் தெரிவித்து விபர பலகைகளை வைக்கப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் அறிக்கை மூலம் தெரிவித்திருப்பது செயல் அலுவலரின் பணியில் பொறுப்பற்ற நிலையில் பணியாற்றியுள்ளதை காட்டுகிறது.

தற்போது நாடு முழுவதும் தெருநாய்கள் பற்றிய பிரச்சினைகள் நிலவி வரும் நிலையில், காசிபாளையம் (கோபி) பேரூராட்சிக்குட்பட்ட தெருநாய்கள் எண்ணிக்கை, கருத்தடை செய்த நாய்களின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் மனுதாரரால் கோரப்பட்டதற்கு, இதற்கான எவ்வித ஆணையும் பெறப்படவில்லை என்கிற தகவல் பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரருக்கு தகவலாக தெரிவித்திருப்பது அவரது பணியில் பொறுப்பற்ற நிலையை காண்பிக்கிறது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஏரியா சபை கூட்டம் நடத்துவது குறித்தான அரசாணைகள் மற்றும் அரசு செய்தி வெளியீடு வெளியிடப்பட்டும், காசிபாளையம் (கோபி) பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி ஏரியா சபை கூட்டத்தை நடத்துவதற்கும் மற்றும் பேரூராட்சியில் நடைபெறும் கட்டுமானப் பணிகளின் விவரம் குறித்து விபர பலகை அமைப்பதற்கான உரிய நடவடிக்கை

மேற்கொள்ளாமல் மெத்தனமாகவும் பணியில் அலட்சியமாகவும் நடந்து கொண்ட சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கையினை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. K.P. மணி,
த/பெ. பழனியப்பன்,
16/42, குப்பன் வீடு,
காசிபாளையம், கோபி தாலுகா,
ஈரோடு மாவட்டம் - 638 454.

2) செயல் அலுவலர்,
காசிபாளையம் (கோபி) பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/11/25
செயலாளர்
19/11/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032